CĀTĀRANA SOCIALISM

# சாதாரண சோஷலிஸம்

By
Talacayanam
(N P)

CONNEMARA PUBLIC LIBRARY
1 FEB 1954
MADRAS

ஆசிரியர்

N. P. தல்சயனம், B.E.

(விலை அணா எட்டு)

கிடைக்குமிடம்

12 B. கோபாலகிருஷ்ணா ரோட்,
தியாகராயநகர், : : சென்னை—17

பதிப்புரிமை: ஆசிரியருக்கே.
முதற் பதிப்பு: 1953. (நவம்பர்)

Ill fares the land to hastening ills a prey,
Where wealth accumulates and men decay,

—*Goldsmith*.

Misfortune may be a good school
But good fortune is the best university.

—*Pushkin*.

XM2
31J3

CONNEMARA PUBLIC LIBRARY
1 FEB 1954
MADRAS

# முன்னுரை

சோஷலிஸத்தில் பலவகை உண்டு. கில்டு சோஷலிஸம், சிண்டிகலிஸம், ஃபேபியன் சோஷலிஸம், பிரஜா சோஷலிஸம் ரெவலூஷனரி சோஷலிஸம், காந்தீயச் சோஷலிஸம் என்பன சில பிராண்டுகள். இப் புத்தகத்தில் யான் விளக்க முயல்வது மார்க்ஸீய சோஷலிஸம். இதுதான் சாதாரண சோஷலிஸம்; மற்றவை எல்லாம் அசாதாரண சோஷலிஸங்கள் தாம்!

உற்பத்தி ஸ்தாபனங்களை அரசாங்கமே எடுத்து நடத்துவதுதான் சோஷலிஸமென்ற குழப்பமான கருத்து சில மேடைப் பேச்சாளர்களிடையேகூட நிலவுகிறது. இது அரசாங்க முதலாளித்துவமே யன்றி சோஷலிஸமாகாது. முதலாளித்துவத்தையும் சோஷலிஸத்தையும் தனித் தனியே விவரிப்பதன் மூலம் இதை விளக்க முயன்றுள்ளேன்.

ஜனநாயக ஆராய்ச்சிக் கழகத்தின் புரட்டுகளுக்கும் பொய்ப் பிரசாரங்களுக்கும் ஓரளவு பதிலளிக்கும் முறையில் இப் புத்தகம் அமைந்திருக்குமே யானால், இதை எழுதிய முக்கிய நோக்கங்களி லொன்று நிறைவேறியதாகக் கருதுவேன்.

ந. பா. தலசயனம்,

தியாகராய நகர்,
சென்னை.

15—10—'53.

## பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| I. | முதலாளித்துவம் | 5 |
| II. | சோஷலிஸம் | 16 |
| III. | அரசாங்கமும் தனிநபரும் சமூகமும் | 29 |
| IV. | சோஷலிஸ ஜனநாயகமும் கட்சி முறையும் | 35 |
| V. | பிரிவினைப் பிரச்னை | 43 |

# சாதாரண சோஷலிஸம்

CONNEMARA PUBLIC LIBRARY
1 FEB 1954
MADRAS

## I

### முதலாளித்துவம்

சார்ல்ஸ் டிக்கன்ஸ் என்னும் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் 1842-ல் அமெரிக்காவிற்குச் சென்று மீண்ட பின், தாம் பல அமெரிக்கர்களோடு நிகழ்த்திய உரையாடல்களுள் நூற்றுக்கணக்கானவை கீழ்வருமாறு இருந்ததாகக் குறிப்பிட்டார் :

டிக்கன்ஸ் : " 'அந்த நபர்' பல கொடிய குற்றங்கள் புரிந்தவனுயிருந்தும், தீய வழிகளிலும் மோசடியாலும் மிகுந்த செல்வத்தைச் சம்பாதித்தவனுக இருந்தபோதிலும், மக்கள் அவனைச் சகித்துக் கொண்டிருப்பதோடல்லாமல் புகழவும் முற்படுவது மானக் கேடான நிலைமை யல்லவா? அவன் பொது மக்களுக்குத் தொந்தரவளிப்பவனல்லவா?'

அமெரிக்கர் : " ஆம், ஐயா."

டிக் : " அவன் பொய்யன் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே ?"

அமெ : " ஆமாம்."

டிக் : அவன் பன்முறை பலரால் காலாலுதைக்கப் படவில்லையா ? பிரம்பாலடிக்கப்பட வில்லையா ?"

அமெ : " மறுப்பதற்கில்லை."

டிக் : " அவன் முற்றிலும் அயோக்கியனல்லவா ? கீழ்த்தரமான ஒழுங்கீனனென்பது உண்மையல்லவா ?"

அமெ : "உண்மைதான்."

டிக் : "என்ன இது! ஆச்சரியமாக இருக்கிறதே! மக்களால் மதிக்கப்படுதற்கு அவனிடத்தில் என்ன யோக்கியதை இருக்கிறது?"

அமெ : "அவர் கம்பீரமான தோற்றமுடையவர்."

'அந்த நபரை'ப் போலக் கம்பீரத் தோற்றமுள்ள பல அயோக்கியர்கள் தங்கள் மோசடிகளுக்குத் 'திறமை' என்னும் முலாம் பூசி 'பெரிய மனிதர்'களாகிப் புகழ் பெறுகின்றனர் என்று கூறி வருந்தினுர் டிக்கன்ஸ்.

'அந்த நபர்' என்று டிக்கன்ஸ் குறிப்பிடுகிருரே அவர் ஒரு செல்வாக்கு மிக்க அமெரிக்கர்; செல்வந்தர். இவர்தான் முதலாளி! இவர் போற்றிப் புகழ்ந்து பரப்ப முயலும் தத்துவம்தான் முதலாளித்துவம்!!

முதலாளித்துவ சமுதாயத்தில் மக்கள் இலாம் அடையும் நோக்கத்துடன் உழைப்பார்கள். இலாப நோக்கந்தான் மனிதனை உழைக்கத் தூண்டக் கூடியது என்று முதலாளிகள் கருதுகிருர்கள். பொருள்களை உற்பத்திச் செய்வோருக்கோ, வியாபாரம் செய்வோருக்கோ அரசாங்கத்தால் எவ்விதத் தடையும் இருக்காது. விலைக் கட்டுப்பாடுகள், பங்கீட்டு முறைகள் முதலியவை இருக்க மாட்டா. தொழிலாளர்களுக் களிக்கப்படும் கூலி, தொழிலதிபர்களுக்குக் கிடைக்கும் வருவாய், இவற்றைப் பற்றி அரசாங்கம் கவலைப்படாது. ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு எவ்விதத் தடையும் விதிக்கப்படாது. பொருள்களின் விலை தேவைக்கும், தேவையைப் பூர்த்தி செய்யும் சக்திகளுக்கும் ஏற்றவாறு தம்மைத் தாமே நிர்ணயித்துக்கொள்ளும். அதாவது தேவை—உற்பத்தி (the law of suply and demand) என்ற சட்டத்திற் குட்பட்டு நடக்கும். தேவைக்கு மேல் உற்பத்திப் பெருகுமானுல் பொருள்களின் விலை குறையத் தொடங்கும். உற்பத்தியால் தேவையைப் பூர்த்தி செய்ய

முடியாவிட்டால் பொருள்களின் விலை ஏறவாரம்பிக்கும். தொழிலாளர்களின் வருவாய் அவர்களது எண்ணிக்கையைப் பொறுத்திருக்கும். வேலை தேடித் திரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை யதிகமானால், வேலையற்றிருப்போருக்கும் வேலையிலிருப்போருக்கும் போட்டி ஏற்பட்டு, அவர்களது கூலி குறையவாரம்பிக்கும். தொழிற்சாலைகளுக்குத் தகுதியும் திறனும் உடைய தொழிலாளர்கள் கிடைப்பது அரிது என்ற நிலை ஏற்பட்டால், கூலியில் ஏற்றம் காணப்படும். தொழிலதிபர்களுக்குக் கிடைக்கும் வருவாய் அவர்களது குறைந்த கூலி கொடுத்து மிகுந்த வேலை வாங்கும் 'திறனையும்', வியாபாரிகளின் இலாபம் அவர்களது பதுக்கி விற்கும் 'திறனையும்' பொறுத்து இருக்கும்.

திட்டமிட்ட பொருளாதாரத்திற்கு முதலாளித்துவத்தில் இடமில்லை. முதலாளித்துவ அரசாங்கம் சார்பற்ற, நடுநிலைமையான போலீஸ் வேலையை மட்டுமே செய்து வரும். மட்டற்ற போட்டியே முதலாளித்துவத்தின் சாராம்சம்.

இப்படிப்பட்ட 'அப்பழுக்கற்ற' முதலாளித்துவம் இன்று உலகில் எங்குமே இல்லை. முற்போக்குச் சக்திகளின் நிர்பந்தத்தினால் முதலாளித்துவம்சோஷலிஸத் தத்துவங்களுள் சிலவற்றை ஏற்றுக் கொண்டு பச்சோந்திபோல் நிறம் மாறிக் காட்சியளிக்கிறது. தன் தாயகமாகிய பிரிட்டனிலேயே அது சிதைந்து வீழ்ச்சியுற்றிருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். கீத் ஹட்சிஸன் என்னும் அமெரிக்கப் பத்திரிகாசிரியர் ஒருவர் "பிரிட்டிஷ் முதலாளித்துவத்தின் சிதைவும் வீழ்ச்சியும்" என்று ஒரு புத்தகமே எழுதியுள்ளார். இக் கூற்றை எல்லோரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆனால் முதலாளித்துவம் தற்பாதுகாப்புக்காகப் பல துறைகளில் சோஷலிஸத்திற்கு அடிபணிந்

திருக்கிறது என்பதற்கு மேற்கூறிய புத்தகம் ஒரு சிறந்த சான்ருகும்.

முதலாளித்துவம் எந்தெந்த துறைகளில் மாறுதல்களை ஏற்றுக் கொண்டிருக்கிறது? அமெரிக்க அரசாங்கம் பல பொருள்களை இறக்குமதி செய்வதைத் தடை செய்கிறது. இது உள்நாட்டுத் தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடு. வேறு சில பொருள்கள் ஏற்றுமதி செய்யப் படுதற்கும் தடை விதிக்கப்படுகிறது. இது 'வரையறை யற்ற போட்டி, கட்டுப்பாடற்ற வியாபாரம்' என்னும் முதலாளித்துவக் கொள்கைக்கடிக்கப்பட்ட சாவுமணி யல்லவா? மேலும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பளிப் பதற்காக 'குறைந்த கூலிச் சட்டம்' என்ற சட்டத்தை இயற்றி இருக்கிருர்கள். இச் சட்டத்தினுல் முதலாளிகள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கும் குறைவாகத் தொழிலாளர் களுக்குக் கூலி கொடுத்து வேலை வாங்குவது தடைப்படுத் தப்படுகிறது. முதலாளிகள் அபரிமிதமான இலாபம் சம்பாதிப்பதை ஓரளவு குறைக்க வருமான வரி விதிக்கப் படுகிறது. முதலாளிகள் தமக்குள் கூட்டு ஏற்படுத்திக் கொண்டு விலைகளை விருப்பம்போல் ஏற்றுவதைத் தடுக்க "டிரஸ்டு எதிர்ப்புச் சட்டங்களை" இயற்றியிருக்கிருர்கள். மேற் கூறியவை முதலாளித்துவக் கொள்கைக்குச் சிறிதும் ஒவ்வாதவை. இவற்றினுல் முதலாளித்துவத்தின் தீமை கள் சிறிது குறைக்கப்படுகின்றனவே ஒழிய அறவே ஒழிக்கப்படவில்லை.

முதலாளித்துவத்தின் குறைகளை இனிக் கவனிப்போம்.

**பொருள் மதிப்புச் சித்தாந்தம்** (Theory of value)

ஒரு பொருளின் மதிப்பை நிர்ணயிப்பதெப்படி? முத லாளித்துவத்தின்படி பொருளின் மதிப்பு அதன் பயனைப் பொறுத்தது. பொருளின் மதிப்பு அதன் விலையை

நிர்ணயிக்கப் பயன்படுகிறது. பொருளின் விலை அதன் பயனைப் பொறுத்து இருக்குமானால், மனிதனுக்கு மிகத் தேவையான தண்ணீர், காற்று இவைகளின் விலை என்ன? இவை இனமாகவல்லவோ சமுதாயத்திற்குக் கிடைக்கின்றன! இவ்வாறு வாதாடினர் சோஷலிஸ்டுகள். முதலாளிகள் விடையளிக்கத் தெரியாமல் பேந்தப் பேந்த விழித்தார்கள்!

இச் சித்தாந்தந்தான் வியாபாரிகள் பொருள்களைப் பதுக்கி வைத்து விலையேறிய பின் விற்றுக் கொள்ளை இலாபம் அடிப்பதற்குச் சாதகமாக விருக்கிறது. கிடைக்கும் பொருள்களின் அளவு குறைந்தால் அவற்றின் பயன் அதிகமாகிவிடுமாம்! "இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை" என்பார்களே அது போல! பொன், வெள்ளி இவற்றின் விலை அதிகமாக விருப்பதேன்? இவை குறைந்த அளவில் கிடைக்கின்றனவென்பதால்தானே? இவ்வாறு வாதம் செய்துவிட்டு, பொருள்களின் விலைகளுக்கு எந்த விதக் கட்டுப்பாடும் இருக்கக்கூடாது என்ற முடிவிற்கு வந்தனர் முதலாளிகள்!

சோஷலிஸ்டுகள் வேறொரு சித்தாந்தத்தை உருவாக்கினர். இச் சித்தாந்தத்திற்கு ஆதரவளித்தவர்களுள் மிக முக்கியமானவர் கார்ல்மார்க்ஸ். பொருளின் மதிப்பு அதை உற்பத்திச் செய்வதற்குத் தேவைப்படும் உழைப்பைப் பொறுத்திருக்கிறது என்பது இச் சித்தாந்தம். இதனால் ஒரு பொருள் தேவையை விடக் குறைவாகவோ அதிகமாகவோ உற்பத்திச் செய்யப்பட்ட போதிலும், அதை உற்பத்திச் செய்யவேண்டிய உழைப்பின் அளவு எவ்வகையிலும் மாறாததால் அதன் விலை ஏறுவதோ இறங்குவதோ கூடாது. அப்படி விலை மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் சக்திகளைக் கட்டுப்படுத்துவதவசியம், என்று மேலும் விவாதிக்கப்பட்டது.

இதைக் கேட்ட முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள், "உற்பத்திச் செய்யப்பட்ட பொருள் பயனற்ற தாயின் அதை யாரும் வாங்கமாட்டார்களே! அப்போது அதன் மதிப்பு பூஜ்ஜியம் ஆகிறதே!" என்று வாதாடினர். இவ் வாதத்திற்குத் திருப்திகரமான பதிலளிக்க முடியவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் பயனற்ற பொருள்கள் சோஷலிஸ சமுதாயத்தில் உற்பத்திச் செய்யப்பட மாட்டா என்று மட்டும் நிச்சயமாகக் கூறலாம். உற்பத்திச் செய்யப்படாத பொருளின் மதிப்பு பூஜ்ஜியம்தானே!

## இலாப நோக்கம்

இலாப நோக்கம் மக்களுக்கு ஊக்கமளிக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அது உற்பத்தியைப் பெருக்கப் பயன்படுகிறதா? நாட்டின் செல்வத்தைப் பெருக்க உதவுகிறதா? பகுத்தறிவுப் போட்டிகளின் உதவியாலும், குதிரைப் பந்தயத்தாலும் பணக்காரர்களாகிறவர்கள் எந்த விதத்தில் நாட்டின் செல்வத்தைப் பெருக்க உதவுகிறார்கள்? சோஷலிஸ சமுதாயத்தில் குறுக்குவழியில் பணக்காரர்களாவதற்கு எவர்க்கும் சுதந்திரம் அளிக்கப்பட மாட்டாது. தொழிற்சாலைகளிலும், மற்ற வியாபார ஸ்தாபனங்களிலும் பங்குகள் மூலம் முதல் போட்டுவிட்டு ஒரு வேலையும் செய்யாமல் இலாபத்தில் பங்கு பெறுகிறவர்கள் நாட்டுக்கு எந்த விதத்தில் பயன்படுகிறார்கள்? இவர்களது இலாப நோக்கம் எந்த விதத்தில் ஆக்க சக்தியை ஊக்குவிக்கிறது? தம் வருமானம் முழுவதையும் தற்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுவதில் செலவழிக்காது, ஒரு பகுதியைச் சேமித்து வைத்து மூலதனமாக அளிப்போர் ஓரளவுக்குத் தியாகம் செய்கிறபடியால், அவர்களுக்குச் சிறிது ஊதியமளிக்க வேண்டியது நியாயமானதுதான். இதற்காக அவர்களுக்கு ஒரு குறிப்

பிட்ட சதவீதம் வட்டி தர வேண்டுமே தவிர இலாபத்தில் பங்கு தர வேண்டியதில்லை. மக்களிடமிருந்து கடன் வாங்கும் அரசாங்கம் வட்டி தருகிறதேயன்றி இலாபத்தைப் பகிர்ந்தளிப்பதில்லை. மேலும் இக் கடன்கள் குறிப்பிட்ட காலத்தில் திருப்பித் தரப்படுகின்றன. கடனளிப்போர் அரசாங்கத்தைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை!

ஜி. டி. எச். கோல் என்னும் ஆங்கிலப் பேராசிரியர், இப் பங்கு முறை நடுத்தர வகுப்பினரும் தொழிலாளரும் முதலாளிகளாக உதவுகின்றதென்கிறார். இதனால் செல்வம் சிலரிடையே குவிவது தடுக்கப்பட்டுப் பலரிடையே பரவ ஏதுவாகிறது என்று அவர் மேலும் கூறுகிறார். இது ஓரளவுக்கு உண்மைதான். ஆனால், பெரும்பாலான பங்குகள் டைரக்டர்களுடையதாய் இருக்குமென்பதும், ஒரு சில நபர்களே நாட்டிலுள்ள எல்லா உற்பத்தி—வியாபார ஸ்தாபனங்களுக்கும் மேனேஜிங் டைரக்டர்களாயிருந்து தம் விருப்பப்படி நாட்டின் பொருளாதாரத்தையும் அரசாங்கத்தையும் ஆட்டி வைப்பர் என்பதும் மறந்துவிடற்பாலனவல்ல.

'உழைப்பு, உற்பத்தி அல்லது திறமைக்கேற்ற ஊதியம்' என்பதே ஊக்கமளிக்கும் பிரச்னையைத் தீர்க்கும் வழி.

### வேலையில்லாத் திண்டாட்டம்

முதலாளித்துவ முறையால் வேலையில்லாத்திண்டாட்டத்தைத் தவிர்க்கவே முடியாது. 100-க்கு 5 முதல் 8 பேர் வரை வேலையற்று இருத்தல் முதலாளித்துவ சமுதாயத்தில் இன்றியமையாதது என்பது அமெரிக்கப் பொருளாதார நிபுணர்களின் கொள்கை. இதற்கு Frictional unemployment என்ற பெயரை அளித்திருக்கிறார்கள். வேலை இல்லாதவர்கள் நாட்டில் இல்லாவிட்டால் தமக்கு

வேண்டிய சிறந்த வேலையாட்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியாமற் போய்விடுமாம் முதலாளிகளுக்கு! ஜனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க அத்தியாவசியமானதென்று பகரும் பெரியோர்களுள் பெரும்பாலோர் முதலாளித்துவக் கனவான்கள்தாம்!

முலாளித்துவத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவது ஏன்? எல்லா முதலாளிகளுக்கும் வாழ்க்கையில் ஒரே ஒரு நோக்கந்தான் உண்டு; அதுதான் இலாபம் சம்பாதிப்பது! ஆகையால் அவர்கள் உற்பத்திச் செய்யவாகும் செலவைக் குறைக்க விரும்பி விடாது முயல்கிறார்கள். இதனால் மனித உழைப்பின் தேவையைக் குறைக்கும் புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன; பல தொழிலாளர்கள் தம் வேலையை இழக்கின்றனர். இவ்விதம் வேலையை யிழந்தோர் நாட்டின் பொருளாதாரத்தை இரண்டு வகைகளில் பாதிக்கின்றனர். முதலாவதாக அவர்கள் வேலையிலிருப்போருடன் போட்டியிட்டு அவர்களது சம்பளத்தைக் குறைக்கின்றார்கள். இரண்டாவதாக மக்களின் வாங்கும் சக்தியும் குறைகிறது. உற்பத்திச் செய்யப்பட்ட பொருள்கள் வாங்குவோர் குறைந்து மார்க்கட்டில் தேங்குகின்றன. முதலாளிகள் இதனால் உற்பத்தியைக் குறைக்கின்றார்கள்; தொழிலாளர்கள் வேலையை இழக்கின்றார்கள். இதனால் மக்களின் வாங்கும் சக்தி மேலும் குறைகின்றது. இந் நிலையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு ஒரே ஒரு வழிதான் முதலாளிகளுக்குத் தென்படுகிறது. அதுதான் போர்த் தளவாடங்களை உற்பத்திச் செய்தல்! அத் தளவாடங்களைப் பயன்படுத்த வேண்டுமல்லவா? இக் கைங்கரியத்தை முதலாளிகள் தமது ஏஜெண்டுகளான ஆட்சியாளருக்கு விட்டுவிடுகிறார்கள். **1914-18**களும் **1939-45**களும் தோன்றுகின்றன.

தோல்வியுற்ற நாடுகளிலுள்ள இயந்திரச் சாலைகள் அடியோடு அழிந்து போவதன்றி, மறுபடியும் புனர் நிர்மாணம் செய்யப் படுவதினின்றும் தடுக்கப்படுகின்றன. வெற்றி பெற்ற நாடுகளின் தொழிற்சாலைகளுங்கூடச் சிதைந்து போனாலும் அவை போட்டியின்மையாலும் அரசாங்கமளிக்கும் ஊக்கத்தாலும் விரைவில் புனர் நிர்மாணிக்கப்படுகின்றன. தோற்ற நாடுகளின் மார்க்கட்டுகள் வென்ற நாடுகளின் புதிய மார்க்கட்டுகளாக அமைகின்றன. இவ்வாறு புதிய மார்க்கட்டுகள் கிடைப்பதனால் உற்பத்திப் பெருகி, வென்ற நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்தொழிகிறது. ஆனால் தோற்ற நாடுகளில் மார்க்கட்டுகள் கை நழுவிவிட்டபடியாலும் தொழிற்சாலைகள் அழிந்துவிட்டமையாலும் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. இதனால் பெறப்படுவதென்ன வென்றால், முதலாளித்துவ அமைப்பில் ஒரு நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டுமானால், வேறொரு நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டேயாக வேண்டும். அதாவது முதலாளித்துவத்தால் வேலையின்மையை ஒழிக்க முடியாது; ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மாற்றத்தான் முடியும். மேற்கூறியவற்றை நிரூபிக்க "குரூப்ஸ்" என்னும் ஜர்மானிய தொழிற்சாலையின் சரித்திரமே போதுமானது!

மூன்றாவதொரு தீமையும் இவ் வியாபார மந்தத்தால் ஏற்படுகிறது. அதாவது ஒரு சில தொழிலதிபர்களின் ஏகபோக உரிமை சக்தி வளர்கிறது. உற்பத்திச் செய்யப்பட்ட பொருள்கள் மார்க்கட்டில் தேங்கும்போது, பெருந் தொழிற்சாலைகள் தாங்கள் உற்பத்திச் செய்யும் பொருள்களின் விலைகளைக் குறைக்கின்றன. சிறிய தொழிற்சாலைகள் நஷ்டமேற்கும் திறனற்று, போட்டியிடும் வன்மை

யற்று சிதைந்து அழிகின்றன. பின்னர், ஏகபோக உரிமை பெற்ற தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தம் விருப்பம் போல் கட்டுப்படுத்தி, விலையை இஷ்டப்படி நிர்ணயித்து கொள்ளை இலாபமடிக்கின்றன. இதனால் தொழிலாளர்களுக்கு ஒருவித நன்மையும் ஏற்படுவதில்லை. செல்வம் சிலர் கைகளிற் குவிகிறது. தொழிலாளர்களின் உபரி உற்பத்தியை உண்டு ஆக்கவேலையிலீடுபடாமல் அவர்கள் சுகமாக வாழ்கின்றனர்.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இவ்வாறு மிகைப்படுத்தப்படும்போது, வேலையற்று வறுமையிலுழலும் மக்களிடை அதிர்ப்தி அதிகரிக்கின்றது. இச் சமயத்தில் திறன் மிகுந்த தலைவர்கள் அம் மக்களுக்குக் கிடைத்தால், அவர்கள் எழுச்சியடைந்து புரட்சி செய்வதற்கான ஆர்வத்தைப் பெறலாம். ஆனல் புரட்சி ஏற்படுவதும் ஏற்படாததும் அந் நாட்டு அரசியலமைப்பையும், மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமையையும் பொறுத்திருக்கிறது. வாக்களிப்பு மூலம் அரசாங்கத்தை மாற்றியமைக்கும் உரிமை மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கும் நாடுகளில் இரத்தப் புரட்சி ஏற்படுவது இன்றியமையாததாகிவிடும். இதற்கு ரஷ்யாவும், சீனவும் உதாரணங்களாக அமைகின்றன. ஆனல் சட்டப்படி அரசாங்கத்தை மாற்றியமைக்கும் உரிமையுள்ள நாடுகளில் மக்களின் இயக்கங்கள் அடக்கியொடுக்கப்படாமலிருக்குமானல் அங்கு பலாத்காரப் புரட்சி ஏற்படுவது அரிது; அவசியமற்றதுங்கூட. ஆனல் இச் சூழ்நிலையிலேற்படும் மாற்றம் மக்கள் விழையுமளவுக்குத் துரிதமாக இராது. இதனல் பலர் ஆர்வமிழந்து மனங் குன்றி 'இராமன் ஆண்டாலென்ன! இராவணன் ஆண்டாலென்ன!' என்ற மனப்பான்மைக்கு அடிமைகளாகிவிடலாம். மேலும் பிரசாரத்தினல் நடுத்தர வகுப்பினரின் மனத்தை மாற்றுவது கடினம். ஏனெனில் பிரசார

இயந்திரங்கள் எல்லாம் செல்வந்தர்களின் ஆதிக்கத்துக் குட்பட்டே யிருக்கும். மேலும் நடுத்தர வகுப்பினர் வேலை நிறுத்தம் போன்ற நேரடிப் போராட்டங்களில் பங்கு கொள்ள விரும்பமாட்டார்கள். ''சோஷலிஸ சமுதாயத்தில் தனி நபரின் சுதந்திரம் பறிபோய்விடும்; ஆக்கச் சக்திகளுக்கு ஊக்கமளிக்கப்படமாட்டாது'' என்ற சுயநலக் கூச்சல்களால் மிக எளிதில் ஏமாற்றப்படுவார்கள். ஆகையால் இச் சூழ்நிலைகளில் ஸ்தாபிக்கப்படும் சோஷலிஸ அரசாங்கம் மக்களுக்கு நன்மை செய்யும் முயற்சியில் ஓரளவுக்காவது வெற்றிபெறும் கால அளவுக்கு நிலைத்து நிற்குமா என்பது சந்தேகந்தான். சமாதானமான முறையில் சோஷலிஸத்தை ஸ்தாபிக்க விழையும் நாடு, முதலாளித்துவத்திற்கும் சோஷலிஸத்திற்கும் இடையில் நீண்ட காலம் ஊசலாடிக்கொண்டிருக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிடும். இதற்கு இங்கிலாந்து சிறந்த உதாரணமாக விளங்குகிறது.

ஆகையால், ஆட்சி முறையை மாற்றியமைக்க மேற்கூறிய இரு வழிகளில் எது சிறந்ததென்பதைத் தலைவர்களே, மக்களின் வீர உணர்ச்சிகளுக் கேற்பவும் சூழ்நிலைகளுக் கேற்பவும், நிர்ணயிக்கவேண்டி யிருக்கும். இந்தியாவில் இவ்விரு வழிகளையும் பின்பற்ற விழையும் இரு சக்திகள் ஒன்றை ஒன்று மோதிக்கொண்டு முதலாளித்துவத்திற்கு அபயமளித்து வருகின்றன. இன்றைய நிலையில் இவ்விரு சக்திகளில் எது வெற்றிபெறும் என்று கூற முயல்வது ஆரூடம் கூறுவதாகவே இருக்கும். இவ்விரு சக்திகளும் ஒன்றை யொன்று அழித்துவிட்டு முதலாளித்துவத்திற்கு நித்திய வாழ்வை யளித்துவிடுமோ என்றுகூட அஞ்ச வேண்டியிருக்கிறது. ஆனல் புரட்சி மனப்பான்மை கொண்டிருந்த தலைவர்களில் பெரும்பாலோர், நாட்டிலேற்பட்டிருக்கும் பல மாறுதல்களுக்கேற்பத் தம் கருத்துக்

களைத் திருத்திக்கொண்டு, சட்டரீதியான நடவடிக்கைகளில் முழு மனத்துடன் ஈடுபட வாரம்பித்திருப்பது நம்பிக்கை யளிப்பதாய் இருக்கிறது.

# II

## சோஷலிஸம்

முதலாளித்துவத்தின் உயிர்நாடி போட்டியும் இலாபமும் என்றால் சோஷலிஸத்தின் உயிர்நாடி ஒத்துழைப்பும் உழைப்புக்குத் தகுந்த ஊதியமுமாகும். பலவகைப்பட்ட உற்பத்தி ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள், பாங்குகள் ஆகியவை உற்பத்தியைப் பெருக்கும் விருப்பத்தோடும், நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் நோக்கத்தோடும் ஒத்துழைப்பதையே முக்கியக் கடமையாகக் கொண்டிருக்கும். மேலே குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் ஒத்துழைக்க வேண்டுமானால் அவை மக்கள் நலங்கோரும் நிர்வாகத்தின் கீழ் வரவேண்டுவது அவசியமாகிறது. ஆகையால் அவை சமுதாயத்திற்குச் சொந்தமாக்கப்பட்டுச் சமுதாயத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டோரால் நிர்வாகிக்கப்படும். சமூக மயமாக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்கு இலாப நோக்கமின்மையால், பொருள்களின் விலை எச் சட்டத்திற்கும் உட்படாது ஏறியிறங்குவது அறவே ஒழியும். இந்த ஸ்தாபனங்களின் மூலம் கிடைக்கும் வருமானம் ஒரு சிலர் கைகளில் குவிவது சாத்தியமின்மையால், மக்களின் வாழ்க்கைத்தரம் பொதுவாக உயரும். இதனால் சமுதாயத்தின் வாங்கும் சக்தி அதிகமாகும். இதன் விளைவாக சமுதாயத்தின் தேவைகள் அதிகரிக்கும். இத் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதிய உற்பத்தி ஸ்தாபனங்கள் தோன்றவாரம்பிக்கும். இதனால்

வேலையில்லாத் திண்டாட்டம் குறையவாரம்பித்து முடிவில் ஒழியும். ஒவ்வொருவரும் "தம்மால் இயன்றவரை உழைக்க வேண்டும்; தம் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெற வேண்டும்" என்ற சோஷலிஸத் தத்துவத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு இடமே இல்லை.

திட்டமிட்ட பொருளாதாரம் சோஷலிஸக் கட்டிடத்தின் முக்கியத் தூண்களில் ஒன்று. இதன்படி முதன் முதலாக மக்களின் தேவைகள் ஆராய்ந்து அறியப்படும். அத் தேவைகள் தமது முக்கியத்துவத்துக் கேற்ப நிர்வாகத்தின் கவனத்தைக் கவரும். இதனால் கிடைத்தற்கரிய பொருள்கள் அவசியமற்ற பொருள்களை உற்பத்திச் செய்ய உபயோகப்படுத்தப் படுவதினின்றும் தடுக்கப்படும். மக்களின் உழைப்பும், நாட்டின் மூலதனமும் ஒரு சில துறைகளில் மட்டுமே மிகுந்து குவிந்து கிடப்பது தடுக்கப்படும். உதாரணமாக, வீடு கட்டுவதற்குத் தேவையான எஃகு கிடைப்பது அரிதாகவிருக்கும்போது, தேவைக்கு அதிகமாக உற்பத்திச் செய்யப்பட்டு, வாங்குவோரற்றுக் குவிந்து கிடக்கும் கார்கள் செய்ய அந்த எஃகு பயன்படுத்தப் படாது. ஆனால் இந் நிலை முதலாளித்துவ நாடுகளில் சர்வ சாதாரணமாகக் காணப்படும். ஏனெனில், எஃகை வீடு கட்டப் பயன்படும் கம்பிகளாகவும், கர்டர்களாகவும் விற்பதைக்காட்டிலும் கார்களாகச் செய்து விற்பது இலாபகரமானது. இதனால் முதலாளிகள் எல்லோரும், "நான், நீ" என்று போட்டியிட்டுக்கொண்டு, தங்கள் மூலதனத்தை எல்லாம் கார்களை உற்பத்திச் செய்யும் தொழிலிலேயே போடுவார்கள். மின்சார உற்பத்தி ஸ்தாபனங்கள் கிராமங்களுக்கு மின்சாரம் வினியோகம் செய்வதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவே மாட்டா. ஏனெனில் இதற்குச் செலவு அதிகமாகும். ஆனால் திட்டமிட்ட பொருளாதாரத்தில் கிராமங்களை மின்சாரமயமாக்குவதற்குப் பெரும்

முக்கியத்துவம் அளிக்கப்படும். ஏனெனில் திட்டத்தில் உணவுப் பொருள் உற்பத்திக்கு முதலிடம் அளிக்கப்படும். இவ்வாறாக முக்கியத்துவத்திற்கு (Pattern of Priorities) திட்டமிட்ட பொருளாதாரத்தில் முதலிடமளிக்கப்படுவதால் உழைப்பும் மூலதனமும் சமுதாயத்திற்கு மிகவும் பயன்படும் துறைகளிலேயே செலவிடப்படும். மேலும் திட்டங்கள் நாட்டு மக்களின் ஒத்துழைப்பைப் பெறப் பெரிதும் பயன்படுகின்றன.

சோஷலிஸ சமுதாயத்திலும் மனித உழைப்பைக் குறைக்கும் இயந்திரங்களைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டுதான் இருக்கும். ஆனல் இவ்வியந்திரங்கள் பயன்படுத்தப்படுவதின் விளைவாகத் தொழிலாளர்கள் வேலையை இழந்துத் தவிக்கமாட்டார்கள். உபரியாகி விடும் தொழிலாளர்களை வேறு தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்திக்கொள்ளும் மாற்று ஏற்பாடுகள் செய்யப் படா முன்னர் மேற்கூறிய இயந்திரங்கள் உபயோகப் படுத்தப்படமாட்டா. அப்படிப் பயன்படுத்தினுலும் தொழிலாளர்களின் உழைப்பு நேரம் குறைக்கப்படுமே யொழிய அவர்களது வருவாய் குறைக்கப்படாது. இவற்றைச் சாதிப்பதற்கு முன்கூட்டியே போடப்படும் திட்டங்கள் அத்தியாவசியமாகின்றன.

நிலங்கள் உழுது பயிர் செய்வோரின் சொத்தாக்கப்பட வேண்டுமென்ற திட்டத்தைச் சில முதலாளிகள் கூட ஒப்புக்கொள்ளுகிறுர்கள். ஒரு குடும்பத்துக்குச் சொந்தமாக விருக்கும் நிலப் பரப்பு, அக் குடும்பத்தால் சிக்கனமான முறையில் சாகுபடி செய்யப்படக்கூடியதாய் இருக்க வேண்டும். இந்த அளவு இடத்தைப் பொறுத்தும், நிலத்தின் தரத்தைப்பொறுத்தும் நிர்ணயிக்கப்படும். நிலங்கள் சிறுச் சிறு கூறுகளாகத் துண்டிக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும். இதற்காகக் கூட்டுவிவசாயத்திற்கு எல்லா

விதச் சௌகரியங்களும் செய்யப்படும். இதனுல் நிலப் பரப்பில் ஒரு பகுதி வரப்புகளாகவும் சிறு வாய்க்கால் களாகவும் வீணுக்கப்படுவதும், அடுத்தடுத்துள்ள நிலச் சொந்தக்காரர்களிடையேஅடிக்கடிச் சண்டைச் சச்சரவுகள் ஏற்படுவதும் தவிர்க்கப்படும். மேலும் இம் முறையில் தான் சாகுபடிக்கு இயந்திரங்களைப் பயன்படுத்துதல், சாகுபடி செய்யப்பட்ட பொருள்களை நீண்டகாலத்திற்குப் பாதுகாத்து வைத்தல், விவசாயத் தொழில் நுட்பங்களை ஆராய்ச்சிச் செய்தல் முதலியவற்றைச் சாதித்தல் சாத்தியமாகும்.

நாளடைவில் தனிப்பட்டோரின் நிலச் சொத்துரிமை குறைந்து மறைய இவ்வேற்பாடு வழிகோலும். சொத்து சமுதாயத்திற்குச் சொந்தமானதென்ற எண்ணம் பரவ ஆரம்பிக்கும். சமுதாயத்தின் நலன் கருதி உழைப்பதே சாலச் சிறந்தது என்ற எண்ணம் மக்கள் மனதில் நிலவும். சோஷலிஸத்தின் முடிவான குறிக்கோளான வகுப்புப் பாகுபாடற்ற, பொருளாதார ஏற்றத் தாழ்வற்ற பொதுவுடைமைச் சமுதாயம் நிறுவப்படும். அச் சமுதாயத்தில் மக்கள் தம்மாலான மட்டும் உழைத்து தமக்கு வேண்டிய அளவு பெறுவார்கள். ஆள்வோர் ஆளப்படுவோர் என்ற பாகுபாடே இராது. இதனுல் அரசாங்கமே அவசியமற்றதாகிவிடும். இதுதான் தத்துவஞானி கார்ல் மார்க்ஸ் கனவு கண்ட சமுதாயம்.

### பிரஜா சோஷலிஸமும் சாதாரண சோஷலிஸமும்

பிரஜா சோஷலிஸ்டுகள் புரட்சியின் அவசியத்தை ஒப்புக் கொள்ளுவதில்லை. எதிர்க் கட்சிகள் விருப்பம்போல் இயங்க எவ்விதத் தடையுமற்ற இந்தியா போன்ற நாடுகளில் புரட்சி அவசியமற்றதென்பதோடல்லாமல் வெற்றியளிக்கக் கூடியதுமல்லவென்பது எல்லோராலும் ஒப்புக்

கொள்ளப்படுகிறது. கார்ல் மார்க்ஸ் அவர்களே, ஜனநாயகம் வேரூன்றியுள்ள பிரிட்டனில் புரட்சியின் உதவியின்றி சோஷலிஸத்தையடைய முடியுமென்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் இந்தோ – சீனா, மலேயா, மொராக்கோ, டுனிஷ்யா, கியானா, கீன்யா போன்ற அந்நியநாட்டு ஆதிக்கத்தின்கீழ் ஜனநாயகமென்றாலே என்னவென்றறியாமலிருக்கும் நாடுகளில் இம்முறை பயனளிக்குமா? ஈரான் போன்ற முன்னேற்றக் கருத்தற்ற முடியாட்சியின் கீழிருக்கும் நாடுகளில்கூட புரட்சி அத்தியாவசியமாகி விடுகிறதென்று கிராஸ்மன் என்ற இங்கிலாந்து தேசத்து தொழிற்கட்சி அங்கத்தினர் கூறுகின்றார். வயது வந்தோரெல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கப்படாத நாட்டில் உள்நாட்டுப் போர் ஏற்படுவதை எதிர்த்துக் கூறுவதற்கு யாதொரு தார்மீக வாதமும் கிடையாது என்று அனூரின் பெவான் பகர்கின்றார். இதைப் பிரஜா கட்சியினர் ஒப்புக் கொள்வதில்லை.

பிரஜா சோஷலிஸ்டுகள் சட்டரீதியான, சமாதானமான மாற்றமென்ற தத்துவத்தைத் தாங்களே புதிதாக ஒன்றும் கண்டுபிடித்து விடவில்லை. மார்க்ஸின் தத்துவங்களை அவசியமான மாற்றமின்றிப் பின்பற்றுவதாகக் கம்யூனிஸ்டுகளைக் குற்றம் சாட்டும் இவர்கள், தங்கள் தத்துவத்தைப் ஃபேபியன் சோஷலிஸ்டுகளிடமிருந்து அப்படியே காப்பியடித்திருக்கிறார்கள்!

ஃபேபியன் சொசைட்டி (Fabian Society) என்பது இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு கட்சி; தொழிற்கட்சியின் ஆதரவைப் பெற்றது. இதன் பெரும்புகழ் பெற்ற அங்கத்தினர்கள், ஜார்ஜ் பெர்னட் ஷா, எச். ஜி. வெல்ஸ், சிட்னி வெப், பீட்ரிஸ் வெப் ஆகியோர். இவர்களது சிந்தனா சக்தி இங்கிலாந்தில் சோஷலிஸ இயக்கத்துக்குப் பெரும் வன்மையைத் தந்தது. இவர்கள் புரட்சியை

எதிர்த்தார்கள். சாதாரண மக்களிடையே பிரசாரம் செய்வதைப்பற்றி இவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அதிக அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டுமென்று முயற்சி செய்யவில்லை. ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றிப் படிப்படியாகச் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்பது இவர்களது திட்டம். இதற்கு "Gas and Water Approach" என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது! மனிதனின் தன்மையை மாற்றுவதற்கு முன்னர் அவனது சூழ்நிலையை மாற்றவேண்டுமென்று இவர்கள் கருதினார்கள். முதலாளித்துவத்தைச் சோஷலிஸக் கருத்துக்கள் ஊடுருவி (Permeate) நிறப்பி ஆட்கொள்ளவேண்டுமென்று இவர்கள் போதித்தார்கள். 1885-ல் (தாம் எழுதிய Fabian Tract No. 3 என்ற நூலில்) பெர்னாட் ஷா, நிலச்சுவான்தார்களைப் பார்த்து, "உடல் வருந்தி உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும், சோஷலிஸத்தின் கொடூரங்களையும் தவிர்க்க நீங்கள் விரும்பினீர்களேயானால், உங்கள் சொத்தில் ஒரு பாகத்தை, பொது நன்மைகளுக்காக உம்மோடு சேர்ந்துகொண்டு புரட்சிகரமான திட்டங்களை எதிர்க்கக்கூடிய, சிறு நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுத்துவிடுங்கள்" என்று கேலியாகக் கூறினார். நம்நாட்டுப் பிரஜா சோஷலிஸ்டுகள் இந்தக் கேலியான யோசனையை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் போலும்!

நம்நாட்டின் ஜனத்தொகை மிகுதியாகவிருப்பதால் கைத்தொழில்களையும் விவசாயத்தையும் இயந்திர மயமாக்கினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுவிடும். ஆகையால் குடிசைத் தொழில்களுக்கு ஊக்கமளிப்பதே இப்பிரச்னையைத் தீர்க்கும் வழி என்று பிரஜா கட்சியினர் நம்புகின்றனர். ஆனால் குடிசைத் தொழில்களால் உற்பத்திச் செய்யப்படும் பொருள்களை யார் வாங்குவார்கள் என்பதை இவர்கள் விளக்குவதில்லை. கைத்தறித் துணிகள்

வாங்குவாரற்று தேங்கிக் கிடப்பதை இவர்கள் ஏன் உணர வில்லையோ தெரியவில்லை!

ஒரு நபருக்குச் சொந்தமாகவிருக்கும் நிலம் ஐந்து ஏக்கருக்குக் குறையக்கூடாது; முப்பது ஏக்கருக்கு மேற்படக் கூடாது என்பது பிரஜா கட்சியின் திட்டம். இதன்படி ஒருவருக்குச் சராசரி பத்து ஏக்கர் நிலம் சொந்தமாக விருக்குமென்று வைத்துக்கொண்டால், நாட்டிலுள்ள 27·7 கோடி ஏக்கர் நிலங்களைப் பத்து ஏக்கர் வீதம் 2·77 கோடி மக்களுக்குத்தான் கொடுக்கமுடியும். அதாவது, இத்திட்டத்தின்படி, 35 கோடி மக்களுள் 3 கோடி பேருக்குத்தான் நாட்டின் நிலமெல்லாம் சொந்தமாக இருக்கும். இப்போது விவசாயத்தால் பிழைக்கும் மற்ற 25 கோடி மக்களுக்கு எந்த நிலத்தைப் பங்கிட்டுக் கொடுப்பது? இது தான் சமத்துவமா? இதுதான் சோஷலிஸமா? இதுதான் பிரச்னையைத் தீர்க்கும் வழியா? இத்திட்டத்தின்படி மக்கள் தகுந்த ஊதியத்தையளிக்காத உழைப்பையும் வறுமையையும்தான் பங்கு போட்டுக்கொள்ள வேண்டியிருக்கும்!

ஐந்து ஏக்கர் நிலங்களைப் பயிரிட குறைந்தபட்சம் இரு எருதுகள், ஏர், கவலை அல்லது ஏற்றத்துக்கு வேண்டிய சாமான்கள், விதை, எரு முதலியவை வேண்டும். இவற்றிற்காகக் குறைந்தது ரூ. 500/– மூலதனம் தேவைப்படும். அன்றாட உணவுக்கே அவதியுறும் மக்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுத்தால் அவர்களுக்கு இம்மூலதனம் கிடைப்பதெங்ஙனம்? அரசாங்கம் கடன் கொடுப்பதென்றால் நிலச் சொந்தக்காரர்கள் 2·77 கோடி பேர்களுள் இரண்டு கோடி பேருக்காவது கடன்கொடுக்க வேண்டி யிருக்கும். இதற்கு ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். இவ்வளவு மூலதனத்தையும் அரசாங்கம் மொத்த ஜனத்தொகையில் 6 சதவிகிதத்தினருக்குத்தான்

செலவிடும்! இதனல் உணவு உற்பத்திப் பெருகுமா? இதனுல் வாழ்க்கைத்தரம் உயருமா? இந்த இரண்டு கோடி மக்களின் வாங்கும் சக்தியும் அவர்களது அன்ருட உணவுத் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ள மட்டுமே போதுமானதாகவிருக்கும். ஆகையால் இவர்கள் கைத்தறியைத் தவிர வேறெந்த குடிசைத் தொழிலேயும் ஆதரிக்கச் சக்தியற்றிருப்பர்.

உடனடியாக வருவாயில் 1:10 என்ற விகிதத்தையும் நிலச் சொத்தில் 1:6 என்ற விகிதத்தையும் அமுல் நடத்த வேண்டுமென்ற பிரஜா சோஷலிஸ்டுகளின் வாதம் எவ்வளவு அபாயகரமானது என்பதைக் காட்டவே மேலே காணும் எளிய விளக்கங்கள் தரப்படுகின்றன. இத்திட்டம் மாணவர்களே மயக்கி வசீகரிக்கப் பயன்படுமேயன்றிப் பிரச்னேயைத் தீர்க்க உதவாது. உடனடியாகச் செய்யப்படும் சீர்திருத்தமெதுவும் உற்பத்தியைப் பெருக்கக் கூடியதாகவே இருக்கவேண்டும்.

தொழில்களே இயந்திர மயமாக்கிவிட்டு, அதற்கு வேண்டிய இயந்திரங்களே வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதால்தான் வேலேயில்லாத் திண்டாட்டம் தீர்க்க முடியாத பெரும் பிரச்னேயாகத் தோற்றமளிக்கிறது. நாம் ஆண்டுதோறும் 20,000 கார்களேயும் லாரிகளேயும் இறக்குமதி செய்கிருேம். இவற்றை நம் நாட்டிலேயே செய்வோமானல் ஏறக்குறைய இரண்டு இலட்சம் பேருக்கு வேலே தரமுடியும். அமெரிக்காவில் இரண்டு கோடி மக்கள் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிருர்கள். அதாவது எழுவரில் ஒரு அமெரிக்கர் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்! மேலும் நாம் டிராக்டர்கள், புல் டோசர்கள், ஆயில் எஞ்சின்கள், சைக்கிள்கள், மின்சாரம் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள், ஆகாய விமானங்கள் போன்றவற்றைப் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிருேம்.

இவற்றை நாமே உற்பத்திச் செய்தால் இரண்டரை கோடி நபர்களுக்கு வேலை தரமுடியுமென்று ஆமதாபாத் தொழிலதிபர் ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். மேற்குறிப்பிட்ட இயந்திரங்களின் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகுமென்பது நிச்சயம்.

மத்திய நீர்—சக்தி கமிஷனின் தலைவரும், பொறியியல் நிபுணருமான கன்வார் செய்ன் என்பவர், மத்திய நீர்ப்பாசன—சக்தி ஆராய்ச்சி போர்டின் 23-ம் ஆண்டுக் கூட்டத்தில் பேசியபோது பின்வரும் புள்ளி விவரங்களை வெளியிட்டார்:—

| | | | |
|---|---|---|---|
| இந்தியாவின் நிலப்பரப்பு | — | 81·3 | கோடி ஏக்கர் |
| பயிர் செய்யத் தகுதியானது | — | 48·0 | ,, ,, |
| பயிர் செய்யப்படுவது | — | 27·7 | ,, ,, |
| நீர்ப்பாசன வசதி பெற்றது | — | 5·0 | ,, ,, |

20·3 கோடி ஏக்கரை இனிமேல்தான் சீர்திருத்திப் பயிர் செய்யவேண்டும்.

தற்போதைய மின்சார உற்பத்தி — 23 இலட்சம் கிலோவாட். இயற்கைச் சக்தி முழுவதையும் பயன்படுத்துவோமானல் இதை நூறு பங்காக அதிகமாக்கலாம்; அதாவது 23 கோடி கிலோவாட் சக்தியை உற்பத்திச் செய்யலாம்!

"ஆறுகள் மூலம் 135 கோடி "ஏக்கர்—அடி" தண்ணீர் கிடைக்கிறது. ஆனல் 7·6 கோடி "ஏக்கர்—அடி" நீரை மட்டும்தான் அணைக்கட்டுகளின் மூலம் பயன்படுத்துகிறோம். ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள அணைகளெல்லாம் சேர்ந்து 7 கோடி "ஏக்கர்—அடி" நீரைத்தான் பயன்படுத்தும். மீதமான 9/10 பாகத்தை இனிமேல்தான் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும்."

நிபுணர் கன்வார் செய்ன் குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அநேக இலட்சம் மக்கள் தேவைப் படுவர். விவசாயத்தில் ஈடுபட்டிருப்போரைத் தொழில் துறைக்குத் திருப்பினுல்தான் மேற்கூறிய காரியங்களைச் செய்து முடிக்கமுடியும். தோழர் ஜி. டி. பிர்லாகூட இதைத் தான் கூறுகின்ருர்:—

இந்தியாவில் "1891-ல் 61·1 சதவீதத்தினர்தான் விவ சாயத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆனுல் இப்போது (1944) 70 சத வீதத்தினர் அத்தொழிலில் வேலை செய்கின்றனர். நாம் தீர்க்கவேண்டிய பிரச்னைகளில் முக்கியமானது இது தான்......

"..................முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் ஒவ்வொன்றின் சரித்திரத்தையும் கவனிப்போமானுல், விவ சாயிகளின் சதவீதம் குறையக் குறைய நாட்டின் செல்வம் மிகுவதைக் காணலாம். அமெரிக்கா, ஃபிரான்ஸ், ஜர்மனி ஆகிய நாடுகள் விவசாயிகளை இயந்திரத் தொழில் துறைக் குத் திருப்பியதன் மூலம்தான் முன்னேற்றங் கண்டன. ஜப்பானில்கூட 1850-ல் 80 சதவீதமாயிருந்த விவசாயி களின் தொகை 1930-ல் 50 சதவீதமாகக் குறைக்கப் பட்டது. இதனுல் அந்நாட்டின் செல்வம் பெரிதும் அதி கரித்தது. நாமும் இதே பாதையில்தான் போகவேண்டு மென்பதைப்பற்றி எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

"விஞ்ஞானப்படி நிர்ணயிக்கப்பட்ட, நாட்டின் மொத்த ஜனத்தொகைக்கும் போதிய உணவை உற்பத்திச் செய்ய நியூஜீலந்து, ஆஸ்ட்ரேலியா ஆகிய நாடுகள் முறையே தம் ஜனத்தொகையில் 6·4 சதவீதத்தையும், 9·7 சதவீதத்தையும் பயன்படுத்தும் என்று "ஈஸ்டர்ன் எகெனு மிஸ்ட்" என்ற பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

"இக்கணக்கை நாம் ஒப்புக்கொள்வோமானால்—தற்கால விவசாய இயந்திரங்களைப் பயன்படுத்துவோமானால்—நம் நாட்டில் விவசாயத்திற்காக 20 சதவீதத்தினருக்கு மேற்பட்டவர்களை உபயோகப்படுத்த வேண்டியிராது."

—("பம்பாய்த் திட்டம்")

நம் வீட்டுப் பிரச்னை மிகவும் பிரம்மாண்டமானது. ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளிலேகூட இப்பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. நம் நாட்டில் 80 சதவீதத்திற்குமேற்பட்டோர், மக்கள் குடியிருக்க இலாயக்கற்ற, இருண்ட குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். ஒரு கிராமத்திற்குப் பத்து வீடுகள் என்ற வீதப்படி பார்த்தால்கூட நம் நாட்டின் ஐந்து இலட்ச கிராமங்களுக்கு, 50 இலட்சம் வீடுகள் உடனடியாகக் கட்டப்படவேண்டும். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இங்கிலாந்தில் தொழிற்கட்சியினர் ஆட்சி நடத்தியபோது, ஐந்து ஆண்டுகளில் (1945–1949), 6,35,677 புதிய வீடுகள் கட்டப்பட்டன; 1,39,000 இடிந்த வீடுகள் சீர்திருத்தப்பட்டன. இதனால் 7,74,677 குடும்பங்களுக்குக் குடியிருக்க வசதி கிடைத்தது. இச்சோஷலிஸச் சாதனை நமக்கு முன்மாதிரியாக அமைய வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் தேவையான மூலதனத்திற்கு எங்கே போவது என்ற வினா எழுவது இயற்கையே. இளவரசர்களது சொத்தைப் பறிமுதல் செய்தால் சுமார் 2000 கோடி ரூபாயும், பிரிட்டிஷ் அமெரிக்க மூலதனங்களைப் பறிமுதல் செய்வதால் ரூ. 600 கோடியும் கிடைக்குமென்று தோழர் பி. சுந்தரய்யா அவர்கள் கூறுகிறார். இவர் கோவில்களின் சொத்தைப்பற்றி யாதும் கூறவில்லை. இவற்றையும் பறிமுதல் செய்தால் ரூ. 500 கோடிக்குமேல் கிடைக்கும். ஒரு நபருக்கு வேலை தருவதற்குச் சராசரி ரூ. 5000/– தேவைப்படும் என்று பொறியியல் நிபுணர்கள்

கணக்கிட்டிருக்கிறார்கள். (இத்தொகை அதிகமானதென் பதே இவ்வாசிரியரின் கருத்து). ஆகையால் மேற்கூறிய ரூ. 3000 கோடியைக் கொண்டு மட்டுமே 60,00,000 பேருக்கு வேலை தரலாம். வாரிசு வரியை இன்னும் உயர்த் தியும், மூலதனத்திற்கு வரி விதித்தும் வரும் வருவாயை ஆக்கத் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம். மன்னர் களுக்கு அளிக்கும் சம்பளத்தை (!) வெகுவாகக் குறைக் கலாம். இராணுவத்திற்காகச் செலவழிக்கும் பணத்தை மிச்சப்படுத்த வழியிருக்கிறதென்பதை ராஜாஜியே ஒப்புக் கொள்ளுகிறார். காஷ்மீர் பாதுகாப்புக்கு மட்டும் ஆண்டு தோறும் இருபத்தைந்து கோடி ரூபாய்க்குமேல் செலவழிக் கப்படுகிறது. நிர்வாகத்திற்காகும் செலவும் பெரிதும் குறைக்கப்படலாம். நம் தூதுவராலயங் களெல்லாம் பணத்தை விரயமாக்கும் நிபுணர்களிடம் சிக்கிக் கிடக் கின்றன! ஆக்கத் திட்டங்களுக்காகப் பொதுமக்களிட மிருந்து கடன் வாங்குதலும் செல்வம் திரட்டும் வழிகளில் முக்கியமானதொன்று.

நம் நாட்டின் ஜனத்தொகை மிகுதியானது என்ற வாதத்தையும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. பின்வரும் புள்ளி விவரங்கள் இதை உறுதிப்படுத்தும்:

| நாடு | பயிர் செய்யப்படும் ஒரு ஹெக்டருக்கு ஜனத்தொகை |
|---|---|
| ஜப்பான் | 11·7 |
| இங்கிலாந்து | 8·9 |
| இந்தோனேஷியா | 8·5 |
| இந்தியா | 2·9 |
| அமெரிக்கா | 1·1 |
| ரஷ்யா | 0·7 |

இங்கிலாந்தும் ஜப்பானும் இந்தியாவைவிட முறையே ஏறக்குறைய மூன்று பங்கு, நான்கு பங்கு ஜனத்தொகையைக் கொண்டவையாய் இருந்தபோதிலும் இயந்திரத் தொழில் நாடுகளாக விளங்குகின்றனவே! இங்கிலாந்து பெரும்பாலான கச்சாப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிறது. ஜப்பான் இரும்பையும் நிலக்கரியையும்கூட இறக்குமதி செய்கிறது. ஆகையால் தான் இவை தம் உற்பத்தியில் ஒரு பாகத்தை ஏற்றுமதி செய்வது அத்யாவசியமாகிறது. இந்தியாவிற்கு இத் தொல்லைகள் கிடையா. நம் பொருள்களைக்கொண்டு நம் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளுதல் முற்றிலும் சாத்தியமே.

மேலும் உழுது பயிர் செய்யக்கூடிய நிலங்களில் ஐம்பது சதவீதத்தைத்தான் நாம் இன்று பயன்படுத்தி வருகிறோம். நம் நாடு குறைந்தது 100 கோடி மக்களுக்கு உணவளிக்கக் கூடியது என்பது இதனால் பெறப்படும். கீழே தரப்படும் புள்ளி விவரங்கள் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

**ஏக்கருக்கு விளைச்சல் (ராத்தலில்)**

**கோதுமை**

| நாடு | விளைச்சல் |
|---|---|
| ஃபிரான்ஸ் | 1591 |
| கனடா | 1025 |
| அமெரிக்கா | 993 |
| இந்தியா | 576 |

ஏக்கரின் உற்பத்தியை சுமார் மூன்று மடங்காக உயர்த்தலாம் என்பது தெளிவு.

**கேழ்வரகு**

| நாடு | விளைச்சல் |
|---|---|
| ஜப்பான் | 3578 |
| சீனு | 2267 |
| இந்தியா | 714 |

உற்பத்திச் சக்தியை ஐந்து மடங்காக உயர்த்துவது சாத்தியமே என்பதை இது காட்டுகிறது. (Chaman Lal)

# III

## அரசாங்கமும், தனிநபரும், சமூகமும்

முதலாளித்துவ, சோஷலிஸ சமுதாய அமைப்புகளில் அறநெறிகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் எத்தகையதென்று இங்கே கவனிப்போம். ஒரு சமூகத்தின் முன்னேற்றம் அதன் பொருளாதார முன்னேற்றத்தை மட்டும் பொறுத்திருக்கவில்லை; அதன் அறநெறியையும் பொறுத்திருக்கிறது. இங்கு முதலாளித்துவத்திற்கு உதாரணமாக அமெரிக்காவையும், சோஷலிஸத்திற்கு இருப்பிடமாக ரஷ்யாவையும் எடுத்துக் கொள்வோம்.

சோவியத் ரஷ்யாவில் போலீஸ் இராஜ்ஜியம் நடக்கிறதென்று முதலாளித்துவ நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. இது ஓரளவுக்கு உண்மைதான். மூன்று பக்கமும் எதிரிகளால் சூழப்பட்டிருக்கும் நாட்டில் போலீஸ் கண்காணிப்புச் சிறிது அதிகமாகத்தான் இருக்கும். முதலாளித்துவத்திற்கு வேவு பார்க்கும் கூலிகள் என்று குற்றம் சாட்டப்பட்டுப் பலர் மரண தண்டனை அடைந்திருக்கின்றனர்; பலர் ஆயுள் தண்டனையடைந்து "லாபர் காம்ப்பு"களில்

(Labour Camps) உழைப்பதாகவும் கூறப்படுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை என்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். எந்த நேரத்திலும் எதிரிகள் தன்னைத் தாக்கக்கூடுமென்று அஞ்சும் ஒரு நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை முதலாளித்துவ நாடுகள் தங்கள் பிரசாரத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன. ஆகையால் இந்நிகழ்ச்சிகளைக் கொண்டு அந்நாட்டுப் பொருளாதார அமைப்பின் தன்மையைப் பற்றியும், சமுதாய அமைப்பின் மேன்மையைப் பற்றியும் எவ்வித முடிவுக்கும் வரமுடியாது.

பிரிட்டனின் ஆட்சியின்கீழ் இருக்கும் கென்யாவிலும் "லாபர் காம்ப்பு"கள் இருப்பதாகவும், அவற்றில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தலைவர்கள் வாட்டி வதைக்கப் படுகிறார்கள் என்ற செய்தியைப் பிரஸ் டிரஸ்ட் ஆஃப் இந்தியா என்னும் செய்தி ஸ்தாபனம் வெளியிட்டிருக்கிறது. இதைப்பற்றி அமெரிக்கர்கள் ஒன்றும் அறிந்திலர் போலும்! மலேயாவில் சில கிராமங்களில் வாழும் மக்கள் தங்கள் கிராமங்களைவிட்டு வெளியேறக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டு அவதியுறுகின்றனர். அவர்களுக்குக் கூட்டு அபராதங்களும் விதிக்கப்படுகின்றன. இது போலீஸ் ஆட்சியல்ல! சான்றோர்கள் ஆட்சி! சாதுக்கள் ஆட்சி!

அமெரிக்காவில் மட்டும் போலீஸ் ஆட்சி நடைபெறவில்லை என்று எவ்வாறு கூறமுடியும்? சமீபத்தில்தான் ரோஸன்பர்க் தம்பதிகள், அணுக்குண்டு இரகசியத்தை ரஷ்யாவிற்குத் தெரிவித்துவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டனர். பலதரப்பட்ட விஞ்ஞானிகள் இவ்வாறு போலீஸ் இம்சைக்கு உட்பட்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு பட்டியலைத் தயாரித்தால் அது

ஒரு புத்தகமாக நீண்டுவிடும்! தனிப்பட்டோர் தம் சொந்தக் கருத்துக்களை அச்சமின்றி வெளியிடுதல் அசாத்திய மானதாகவும் அபாயகரமானதாகவும் ஆகிவருகிறது. மெக் கார்தியின் மிரட்டல்களைக் கண்டு அமெரிக்க நாடே அலறு கின்றது. இந்த நபர் விஞ்ஞானி ஐன்ஸ்டைனைக்கூடக் கண் டிக்க ஆரம்பித்திருக்கிறார்! போலீஸ் இலாகாவோடு யாதொரு தொடர்பும் இல்லாத இந்த நபருக்கே இவ்வளவு அதிகாரமென்றால், போலீஸ் அதிகாரிகளைப்பற்றி அதிகம் கூறுவானேன்? அமெரிக்காவைச் சூழ்ந்திருப்பது கடல் தான்; எதிரி நாடுகள் அல்லவென்பதையும் நாம் இங்கே கவனிக்கவேண்டும்.

அமெரிக்காவில் கம்யூனிஸப் பிரசாரம் செய்வதாகக் கருதப்படும் புத்தகங்கள் தீயிலிடப்படுகின்றன. ஆனால் ரஷ்யாவிலோ முதலாளித்துவப் பிரசாரம் செய்யும் புத்த கங்களை வெளியிடவே முடியாது! அங்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற புத்தகங்களை மட்டுமே வெளியிட முடியும். ஏனெனில் அங்குள்ள அச்சகங்கள் எல்லாம் அரசாங்கத்திற்கே சொந்தமானவை. ரஷ்யாவில் ஆபாசக் கருத்துக்களைப் பரப்பும் புத்தகங்களை வெளியிடவே முடியாது. ஆனால் அமெரிக்காவில் அப்படிப்பட்ட புத்த கங்கள் தான் அதிகமாக விலையாகின்றனவென்று "சாட்டர் டே ரெவ்யூ" (Saturday Review) என்னும் அமெரிக்கப் பத்திரிகையே கூறுகிறது. அமெரிக்காவில் நிர்வாணச் சங்கங்கள் எல்லாச் சுதந்திரத்துடனும் இயங்குகின்றன. ரஷ்யாவிலோ, நடிகைகளின் அரை நிர்வாணப் படங்கள் கூட சலூன்களிலும் இருக்கக்கூடாது என்று சட்டம் இயற்றி இருக்கிறார்கள்.

**1953**-ஆம் ஆண்டு முதல் ஆறு மாதங்களுக்குள் **10,47,290** பெருங் குற்றங்கள் அமெரிக்காவில் புரியப்பட்ட

தாக அந்நாட்டு இரகசியப் போலீஸ் டைரக்டர் எட்கார் ஹூவர் தம் அறிக்கையில் (20—9—1953) குறிப்பிட்டிருக்கிறார். அங்கு 14·9 வினாடிகளுக்கு ஒரு பெரும் குற்றம் செய்யப்படுகிறதாம். 40·3 நிமிடங்களுக்கு ஒரு கொலை, 29·4 நிமிடங்களுக்கொருமுறை பலாத்காரக் கற்பழிப்பு, 5·71 நிமிடங்களுக்கொரு கொள்ளை, 2·31 நிமிடங்களுக்கு ஒரு கார் திருட்டு நடக்கிறதென்று அவர் மேலும் கூறினார். நிச்சயமாக ரஷ்யாவில் கற்பழிப்புகளும், கார் திருட்டுகளும், கொள்ளைகளும் நடைபெறவே முடியாது. கொள்ளையடிக்கப்படக்கூடிய கோடீஸ்வரர்கள் இருந்தால்தானே கொள்ளையடிப்போர் தோன்றுவர்?

அமெரிக்கச் சமூகத்தில் நடிகைகளுக்கும் அழகிகளுக்கும்தான் பெருமதிப்பு அளிக்கப்படுகிறது. தோழர் வின்ஸ்டன் சர்ச்சில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்தபோது அவரைக் காண வந்திருந்த கூட்டம் ஒரு சாதாரண நடிகையைக் காணவரும் கூட்டத்தைக் காட்டிலும் மிகக் குறைவாக இருந்ததாம். ரஷ்ய சமுதாயத்தில் எழுத்தாளர்களுக்கும் பேராசிரியர்களுக்கும்தான் பெருமதிப்பு அளிக்கப்படுகிறது. ஸ்டாலின் பரிசு பெறுவதையே தங்கள் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டுள்ள ரஷ்யர் பலர்; இப்பரிசு சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கும், உயர்ந்த உழைப்பாளர்களுக்கும் அளிக்கப்படுகிறது. பல கலைஞர்களும் இப்பரிசைப் பெற்று மகிழ்கிறார்கள். முதலாளித்துவ சமுதாயத்தில் மக்கள் செல்வந்தர்களாவதற்கே உழைக்கிறார்கள். சோஷலிஸ சமுதாயத்தில் மக்கள் புகழ்பெறப் பாடுபடுகிறார்கள்; "தம் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற உயர்நோக்கை மேற்கொள்ளுகிறார்கள்.

உணர்ச்சி வயப்பட்டு இவற்றையெல்லாம் குறிப்பிடுவதாக நினைக்கக்கூடாது. சுதந்திரம் பறிபோகிறதென்று

கூக்குரலிடுவோர் யார் என்பதையும், எத்தகைய சுதந்திரங்கள் பறிபோகின்றனவென்பதையும் அறிந்துகொள்ள மேற்கூறிய உண்மைகள் பயன்படும் என்ற எண்ணத்தோடுதான் அவை இங்கே குறிப்பிடப்படுகின்றன. ஒரு நாட்டின் செல்வத்தைக்காட்டிலும் அதன் கலைப் பண்பாடும் நாகரிக மேம்பாடும் முக்கியமானவை என்று கருதும் மனப்பண்புடைய கீழ்நாட்டினரல்லவா நாம்? மேல் நாட்டினருக்கு நாம் அளிக்கக்கூடிய செல்வம் நம் பழங்காலக் கலாச்சாரம்தானே!

சோஷலிஸம் தனி நபர்களின் முக்கியத்துவத்தை மறுக்கிறதென்று சிலர் சொல்வர். இது உண்மையல்ல. தோழர் ஸ்டாலின் (13—12—1931-ல்) எமில் லுட்விக் என்ற ஜர்மானிய எழுத்தாளருக்கு அளித்த பேட்டியில், கொடுத்த விளக்கத்தை இங்குக் கவனிப்போம்:—

லுட்விக்:—தனிநபர்கள் சரித்திரத்தில் பெரும் பங்கு கொள்கிருர்கள் என்பதை மார்க்ஸீயம் மறுக்கிறது. பொருளியலின் (Materialism) சரித்திரத்தைப் பற்றிய கருத்துக்கும், நீங்கள் தனிப்பட்டோரின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொள்ளுவதற்கும் இடையே முரண்பாடு இருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா?

ஸ்டாலின்:—இவ்விடத்தில் எவ்வித முரண்பாடுமில்லை. தனிநபர்கள் சரித்திரத்தையே ஆக்குகிருர்கள் என்பதையோ, அல்லது சரித்திரத்தில் முக்கிய இடம் பெறுகிருர்கள் என்பதையோ மார்க்ஸீயம் மறுக்கவில்லை. மார்க்ஸ், தாம் எழுதிய "வேதாந்தத்தின் ஏழ்மை" (The Poverty or Philosophy) என்னும் நூலில், தனி நபர்கள்தான் சரித்திரத்தையே ஆக்குகிருர்கள் என்றுகூறி

யிருப்பதைக் காணலாம். ஆனால் தனிநபர்கள் தம்கற்பனைப் படியோ அன்றித் தமக்குத் தோன்றியவாறோ சரித்திரத்தை ஆக்குவதில்லை. ஒவ்வொரு தலைமுறையும் தான் தோன்றும் போது முன் தலைமுறையின் சூழ்நிலைகளை உள்ளது உள்ள வாறேகாண்கிறது. பெரியோர்களுக்கு ஏதாவது யோக்கிய தாம்சம் இருக்குமேயானால், அது அவர்களது சூழ்நிலையை உள்ளவாறு அறியும் திறனையும், அவற்றை எவ்விதம் மாற்றமுடியும் என்ற அறிவையும் பொறுத்திருக்கிறது. அவ்வாறின்றித் தம் கற்பனைக் கேற்றவாறு சூழ்நிலையை மாற்ற விரும்புபவர்கள் டான் குய்க்ஸோட்டின் நிலையை அடைந்து விடுவார்கள். இவ்வாறாக, மார்க்ஸீயத்தின்படி, மனிதர்களைச் சூழ்நிலைகளோடு ஒப்பிட்டுப்பார்ப்பது தவறு. மனிதர்கள் சரித்திரத்தை ஆக்குகிறார்கள்; ஆனால் சூழ்நிலை களையும் அவற்றை மாற்றும் வழிகளையும் எந்த அளவுக்கு அவர்கள் அறிந்திருக்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் அவர்களால் சரித்திரத்தை ஆக்கமுடியும். ரஷ்ய போல்ஷி விக்குகளான நாங்கள் இவ்வாறுதான் மார்க்ஸீயத்தைப் புரிந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் பத்து ஆண்டுகளுக்கு மேலாக மார்க்ஸீயத்தைப் பயின்று வருகிறோம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

லுட்விக்:—ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நான் சர்வகலாசாலையில் பயின்று கொண்டிருந்த போது, பொருளியலின் சரித்திர விளக்கத்தை ஒப்புக் கொண்டதாகக் கூறிக்கொண்ட ஜர்மானியப் பேராசிரியர் கள், மார்க்ஸீயம் வீரம்மிக்க நபர்கள் சரித்திரத்தில் பங்கு கொள்வதை மறுக்கிறதென்றே கற்பித்தார்கள்.

ஸ்டாலின்:—அவர்கள் மார்க்ஸீயத்தை மாசுபடுத்திய வர்கள். மார்க்ஸீயம் தனிநபர்களின் முக்கியத்துவத்தை

எப்போதும் மறுத்ததில்லை. அதற்கு மாறாக, மேற்கூறிய வரையறைகளுக்குட்பட்டு, அவர்கள் முக்கிய பங்கு கொள்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறது.

# IV

## சோஷலிஸ ஜனநாயகமும் கட்சி முறையும்

மக்களிடையே கருத்து வேற்றுமைகள் இருப்பது இயற்கையே. ஒரு சிலரின் கருத்துக்கள் வேறு சிலரின் கருத்துக்களினின்று மாறுபட்டிருப்பதோடு அல்லாது ஒன்றுக்கொன்று நேர் எதிராகவும் இருக்கின்றன. மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களின் ஜனநாயக அரசாங்கம் அம்மக்களின் கருத்துக்களுக்கேற்ப நடைபெற வேண்டுமல்லவா? கருத்து வேற்றுமைகள் ஏற்படும்போது, எச்சாரார்களின் கருத்திற்கேற்ப அரசாங்கம் நடைபெற வேண்டும்? தெளிவாக, பெரும்பான்மையோரின் கருத்துக்களுக்கேற்பத்தான். மேற்குறிப்பிடப்பட்ட பிரிவினர் பலரும் தமக்குள் ஒப்பிய கருத்துக்களை வற்புறுத்தவும், வேற்றுமைகளைக் குறைத்து மறைக்கவும், சகிப்புத் தன்மையை வளர்க்கவும் தமக்குள் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இப்படிக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு இயங்கும் குழுவினரைக் கட்சியினர் என்கிறோம்; அவர்களது இயக்கம் கட்சி என்று அழைக்கப்படுகிறது. பலதரப்பட்ட கட்சியினர் தனித்தியங்குவதற்குச் சமாதானங்கள் கூறப்பட வேண்டுமல்லவா? ஆகையால் அவர்கள் தம்மைப் பிரிக்கும் வேற்றுமைகளை வற்புறுத்திக் கூறுவது அவசியமாகிறது. ஒரு கட்சி தன் கொள்கைகளின் மேன்மைகளையும் பிற கட்சிகளுடைய

கொள்கை, திட்டம் ஆகியவற்றின் குறைபாடுகளையும் குறித்துப் பிரசாரம் செய்வதன் மூலம்தான் தன் செல்வாக்கை வளர்க்கமுடியும். மேற்கூறிய இலக்கணங்கள் எல்லாக் கட்சிகளுக்கும் பொருந்தும்.

மேலே குறிப்பிடப்பட்டவை மிகச்சாதாரண கருத்துக்கள்தாம். ஆனாலும் அவற்றைப் பற்றிச் சிலகட்சித் தலைவர்களிடையே சந்தேகங்கள் தோன்றவாரம்பித்திருப்பதாகத் தெரிகிறது. இது சிந்தனைக் குழப்பத்தின் விளைவா அல்லது குறுக்கு வழிகளின்மூலம் குறிக்கோளை எளிதில் அடைந்துவிடலாம் என்ற அவாவின் விளைவா என்பது தெளிவாகத் தெரியவில்லை!

தோழர் அசோகா மேத்தா மின்னல் வேகத்தில் புதிய புதிய தத்துவங்களையும் சித்தாந்தங்களையும் கண்டுபிடித்து வருகிறார். ஜனநாயக சோஷலிஸத்தில் அரசியல் கட்சிகளின் பணியைப் பற்றியதொரு புதிய தத்துவத்தை அவர் உருவாக்கி இருக்கிறார். இதை பீடுல் மாநாட்டில் சமர்ப்பித்தார். இதில் அவர், நாம் மேற்கூறிய அரசியல் கட்சிகளின் இலக்கணங்களுள் பலவற்றை மறுத்திருக்கிறார். அதன்படி கட்சிகள், இடதுசாரிக் கட்சிகள், வலதுசாரிக் கட்சிகள் என்று இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஆளும் கட்சியோடு எதிர்க் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்பது வற்புறுத்தப்படுகிறது. எதிர்க் கட்சிகள் ஆளும் கட்சியின் கொள்கைகளோடு தம்முடையவை ஒத்திருக்கின்றனவாவென்று ஆராய்ந்து, அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒத்துழைப்பதன்மூலம் கூட்டு மந்திரிசபை அமைக்க முயலவேண்டுமாம். பின்னர் தம் கருத்துக்களை ஆட்சிமுறையில் புகுத்திச் சீர்திருத்தங்கள் செய்து தம் குறிக்கோளையடைய முயற்சிக்க வேண்டுமாம்.

ஆளும் கட்சி எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரும் அளவிற்குப் பலவீனமுற்றில்லாவிட்டால் என் செய்வது? இந்த நிலையில்தான் எதிர்க் கட்சிகள் ஆளும் கட்சிக்கு எதிராக எழுச்சி கொள்ளுமாறு மக்களைத் தூண்ட வேண்டுமாம். (Coalition, co-operation or mass upsurge). பிடுல் மாநாட்டில் கூடியிருந்த சோஷலிஸ்டுகள் இக்கொள்கையைக் கைகொட்டி ஆர்ப்பரித்து வரவேற்றனர். தம் தலைவர் இந்தியாவின் நிதிமந்திரியாவதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்படுவதைக் காணும் அரசியல் ஊழியர்களுக்கு மகிழ்ச்சி பொங்காமல் போகுமா?

தத்துவரீதியாகப் பார்க்கும்போது அசோகா மேத்தாவின் சித்தாந்தம் குற்றமற்றதாகச் சிலருக்குத் தோன்றலாம். ஆனால் நடைமுறையில் இது ஒத்துழைக்கும் கட்சியைப் பலவீனப்படுத்தவே பயன்படும். முதலாவதாக ஒத்துழைக்கும் கட்சி, தன் திட்டத்தில் ஒரு சிறு பகுதியை நிறைவேற்றுவதற்காகத் தனக்கொப்பாத ஆளும் கட்சியின் திட்டத்தில் பெரும்பாகத்தை நிறைவேற்றி வைப்பதற்கு உடந்தையாக இருக்கவேண்டி யிருக்கும். இதை மற்ற எதிர்க் கட்சிகள் தம் பிரசாரத்திற்காக நன்கு பயன்படுத்திக் கொள்ளும். மேலும் ஆளும் கட்சி ஒத்துழைக்கும் கட்சியின் நிர்ப்பந்தத்தால் செய்யும் சிற்சில நற்காரியங்களால் கிடைக்கும் ஆதரவைத் தானே அடைந்துவிட முயற்சிக்கும். அதிகார ஆசையினால் தன் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டது என்ற மற்ற எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டுக்கும், எம் கொள்கைகளுக்கும் எம்மோடு ஒத்துழைக்கும் கட்சியின் கொள்கைகளுக்கும் பெரிய வேறுபாடு ஒன்றுமில்லை என்ற ஆளும் கட்சியின் பிரசாரத்திற்கும் இடையில் ஒத்துழைக்கும் கட்சி சிக்கிச் சிதைவுறும். உதாரணமாகக் கம்யூனிஸ்டுகள் பிரஜா சோஷ

லிஸ்டுக் கட்சியினரைக் "காங்கிரசின் கார்பன் காப்பி" என்று கேலி செய்கின்றனர். காங்கிரஸ்காரர்களும் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியினரின் கொள்கைகளும் திட்டங்களும் தம்முடையவைகளினின்று வேறுபட்டனவல்லவென்று கூறுகின்றனர். வேற்றுமைகளை அலசி ஆராய அவகாசமும் நுணுக்க அறிவும் அற்ற பலர் இப்பிரசாரத்திற்கு இலகுவில் இரையாவர். மேலும் ஆளும் கட்சியினர், ஒருசில மிகச் சாதாரண சீர்திருத்தங்களைச் செய்துவிட்டு மக்களின் எழுச்சிச்சக்தியைப் பெரிதும் பாதித்துவிடுவர். சாதாரண காலத்தில் ஆளும் கட்சியோடு ஒத்துழைக்கும் எதிர்க் கட்சியின் செயல் தற்கொலைக்கு ஒப்பாகுமென்று நரேந்திர தேவ் கூறுவது முற்றிலும் உண்மை. பிரிட்டனில் லிபரல் கட்சியின் வீழ்ச்சி இப்பாடத்தை நமக்குக் கற்பிக்கிறது.

### மேல்நாட்டு ஜனநாயகம்

ஜனநாயகத்தில் பெரும்பாலோரின் கருத்துக்கும் விருப்பத்துக்கும் ஏற்ப அரசாங்கம் நடைபெற வேண்டுமென்பது அவசியமாயினும் இது எப்போதும் சாத்தியமல்ல. நாட்டில் பல கட்சிகள் இருக்குமேயானல் சிறுபான்மையினரின் ஆதரவுபெற்ற கட்சி அதிகாரத்துக்கு வருதல் சாத்தியமே. உதாரணமாக ஒரு நாட்டில் ஐந்து கட்சிகள் இருப்பதாகக் கொள்வோம். முதல் கட்சி 35%, இரண்டாம் கட்சி 25%, மூன்ரும் கட்சி 20%, நான்காம் கட்சி 15%, ஐந்தாம் கட்சி 5% வீதம் ஓட்டுகள் பெற்ருல், முதல் கட்சியே அதிகாரத்தைப் பற்றும். இவ்வரசாங்கம் 35 சதவீதத்தினரின் ஆதரவையும் 65 சதவீதத்தினரின் எதிர்ப்பையும் பெற்றிருக்கும். இது ஒருவகையான ஜனநாயகம்!

இரு கட்சி ஆட்சியில்கூட இந்த நிலை ஏற்படக்கூடும். இதற்கு ஃபிரான்ஸ் தேசம் உதாரணமாக விளங்குகிறது.

ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்டோரின் ஆதரவைப் பெற்றிருக்கும் கம்யூனிஸ்டுக் கட்சியால் அங்கே அதிகாரத்தைப் பற்றமுடியவில்லை. இதற்குக் காரணம் டிகாலே போன்ற அரசியல் தந்திரிகள் கம்யூனிஸ்டுகளுக்குப் பாதகமான முறையில் தேர்தல் தொகுதிகளை அமைத்திருப்பதுதான்.

| | |
|---|---|
| A<br>900<br>I | B<br>400<br>II |
| C<br>300<br>II | D<br>800<br>I |

உதாரணமாக A B C D என்ற நான்கு பேட்டைகளை எடுத்துக் கொள்வோம். அவை ஒவ்வொன்றின் ஜனத் தொகையும் 1000 என்று வைத்துக்கொள்வோம். இந்நான்கு பேட்டைகளையும் பொதுத் தேர்தலுக்காக இரு தொகுதிகளாகப் பிரிப்பதுதான் நம்முடைய பிரச்னை. Aயில் 900 வோட்டர்களும், Bயில் 400 பேரும், Cயில் 300 பேரும், Dயில் 800 பேரும் கம்யூனிஸ்டுகளுக்கு ஓட்டளிப்பார்கள் என்பதையறிந்து ஆளும் வர்க்கம், Aயையும் Dயையும் சேர்த்து ஒரு தொகுதியாகவும், Bயையும் Cயையும் இணைத்து மற்றொரு தொகுதியாகவும் அமைத்துவிடும். இத்தொகுதிகளில் போட்டியிட இரண்டு கட்சிகளே இருக்குமானால், முதற்றொகுதியில் கம்யூனிஸ்டு அபேட்சகர் 1700 வோட்டுகள் பெற்று வெற்றியடைவார்; இரண்

டாம் தொகுதியில் கம்யூனிஸ்டு 700 வோட்டுகளே பெற்று தோல்வியுறுவார்.

| | |
|---|---|
| A<br>900<br>I | B<br>400<br>II |
| C<br>300<br>II | D<br>800<br>II |

இப்போது தொகுதியமைப்பை மாற்றி Aயையும் Cயையும் ஒரு தொகுதியாகவும், Bயையும் Dயையும் மற்ருெரு தொகுதியாகவும் அமைத்தால், இவ்விரு தொகுதிகளிலும் கம்யூனிஸ்டு அபேட்சகர்கள் முறையே 1200 வோட்டுகள் பெற்று வெற்றியடைவர்.

ஃபிரான்ஸ் தேசத்தில் முதலில் குறிப்பிட்ட முறையே கையாளப்படுகிறது. அங்கு இரண்டுக்கு மேற்பட்ட கட்சிகள் இருந்தபோதிலும், கம்யூனிஸ்டுகளின் பலம் மிகுந்து உள்ள இடங்களில் கம்யூனிஸ்ட்டு எதிர்ப்பு முன்னணி அமைப்பதன்மூலம் இத்தொகுதிகளில் இரண்டு கட்சிகளே போட்டியிடுவது சாத்தியமாகிறது. இது மற்ருெரு வகையான ஜனநாயகம்!

ஃபிரெஞ்சு ஜனநாயகம் எத்தகையதென்று மேலே கண்டோம். இப்போது பிரிட்டிஷ் ஜனநாயகம் எப்படிப் பட்டதென்றுக் கவனிப்போம். பிரிட்டிஷ் தொழிற்கட்சிக்கு இருபத்தேழு அங்கத்தினர்கள் கொண்ட காரியக்

கமிட்டி இருக்கிறது. இதில் ஏழு அங்கத்தினர்கள் தொழிற் சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இத்தேர்தல்களில் "கூட்டு வோட்டளிப்பு" (Block voting) முறை கையாளப்படுகிறது. இம்முறைப்படி ஒவ்வொரு தொழிற் சங்கமும் ஒரு தனிநபர் போன்று ஓட்டளிக்கும். ஒரு தொழிற்சங்கத்தின் அங்கத்தினர்களெல்லாம் ஒன்றுகூடி எந்த நபருக்கு வோட்டளிக்க வேண்டுமென்பதை வாக்கெடுப்புமூலம் நிர்ணயிப்பர். பிறகு அந்நபருக்கு அச்சங்கம் ஓட்டளிக்கும்; அதாவது எல்லா அங்கத்தினர்களின் வோட்டும் அந்நபருக்கே அளிக்கப்பட்டுவிடும். இம்முறையினால் சிறுபான்மையினரின் ஆதரவுபெற்ற பலர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதைச் சீர்திருத்த பல முயற்சிகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு முயற்சியும் மேற்குறிப்பிடப்பட்ட கூட்டு வோட்டளிப்பு முறையாலேயே தோற்கடிக்கப்பட்டது!

உதாரணமாக, இரு தொழிற் சங்கங்களை எடுத்துக் கொள்வோம். ஒரு சங்கத்தில் பத்தாயிரம் அங்கத்தினர்களும் மற்றொன்றில் ஐயாயிரம் அங்கத்தினர்களும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். A, B என்ற இருவர் ஒரு ஸ்தானத்திற்காகப் போட்டியிடுகின்றனர். முதல் சங்கத்தில் Aக்கு 5500 வாக்குகளும் Bக்கு 4500 வாக்குகளும் கிடைக்கின்றன. Aக்குப் பெரும்பான்மையோரின் ஆதரவு இருப்பதால் அவருக்கு அச்சங்கத்தின் கூட்டு வோட்டு அளிக்கப்படும். இதனால் அச்சங்கத்தின் பத்தாயிரம் வோட்டுகளும் Aக்கு அளிக்கப்பட்டுவிட்டதாகப் பாவிக்கப்படுகிறது. இரண்டாவது சங்கத்தில் Aக்கு ஆயிரம் வோட்டுகளும் Bக்கு 4000 வோட்டுகளும் அளிக்கப்படுகின்றன. B பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்று இருப்பதால் அவருக்கு இரண்டாவது சங்கத்தின் கூட்டு

வோட்டு அளிக்கப்படுகிறது ; அதாவது அச்சங்கத்தின் ஐயாயிரம் வோட்டுகளும் Bக்கு அளிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகிறது. இம்முறையினுல் A, பத்தாயிரம் வோட்டுகள் பெற்று தேர்ந்தெடுக்கப்படுகிருர் ; B, ஐந்தாயிரம் வோட்டுகள் பெற்றுத் தோல்வியுறுகிருர். ஆனல் நேர் வோட்டெடுப்பில் A (5500+1000)=6500 வோட்டுகளே பெற்றிருப்பார்; B (4500+4000)=8500 வோட்டுகள் பெற்று வெற்றி பெற்றிருப்பார்! கூட்டு வோட்டளிப்பு முறை மேல்நாட்டு ஜனநாயகத்துக்கு மற்ெருரு எடுத்துக் காட்டு!

மேல்நாட்டு ஜனநாயகம் எத்தகையதென்று மேலே கண்டோம். ஒரு-கட்சி முறையை (Single Party System) பின்பற்றும் ரஷ்யாவிலேகூட மேற்குறிப்பிட்டவை போன்ற குறைகள் காணப்படவில்லை. ரஷ்ய அரசியல் திட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்வோர், மக்கள் நலத்தைப் புறக்கணிப்போர், சோம்பிக்கிடப்போர் ஆகிய அங்கத்தினர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளும் அதிகாரம் மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. வேறெந்தநாட்டு அரசியல் திட்டத்திலும் இந்த ஷரத்து இல்லை. தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைத் தம் விருப்பம்போல் நடக்கச் செய்ய மக்களுக்கு அதிகாரமளிக்காத அரசியல் திட்டங்களை ஜனநாயக அரசியல் திட்டங்களென்று எவ்வாறு கூறமுடியும்? ஒரு கட்சி ஆட்சி முறையில் கட்சிக்காரர்கள் நாட்டு நிர்வாகத்தில் அதிகம் தலையிட்டு உத்தியோகஸ்தர்களுக்கு இடையூறு செய்கிருர்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறது. ஆனல் மற்ற நாடுகளிலிருப்பதுபோலல்லாது, ரஷ்யாவில் உத்தியோகஸ்தர்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளுவதற்கு எவ்விதத் தடையும் இருப்பதில்லை.

1936ம் ஆண்டில் எல்லா டிரஸ்டுகளின் தலைவர்களும், கம்பனி டைரக்டர்களில் 97 சதவீதத்தினரும், கட்டிடத் தொழில் தலைவர்களில் 82 சதவீதத்தினரும், பிரதம என் ஜினியர்களில் 40 சதவீதத்தினரும் ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அங்கத்தினர்களாக இருந்தனர் என்ற உண்மையை நோக்குமிடத்து, மேற்குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டு எவ்வளவு பொருளற்றது என்பது புலப் படும். இப்புள்ளி விவரங்கள் ஆக்ஸ்போர்டு சர்வகலா சாலையின் ஆராய்ச்சி வெளியீடான "ரஷ்யாவில் இயந்திரத் தொழில் விவசாயம் இவற்றின் நிர்வாகம்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டன. இச்சதவீதங்கள் ஆண்டு தோறும் அதிகரித்து வருகின்றனவென்று அந்நூல் மேலும் கூறுகிறது. ரஷ்யாவில் அரசாங்க ஊழியர்கள் கூட பொதுத் தேர்தல்களில் போட்டியிடலாம். ஜன நாயகம் செழித்தோங்குவதாகவும், தனிநபரின் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதாகவும் சொல்லப்படும் முதலாளித்துவ நாடுகளில் இது சாத்தியமா? இந்த ஜனநாயகங்களில் அரசியலில் பங்கெடுத்துக் கொள்வதாகச் சந்தேகப்படப் படும் அரசாங்க ஊழியர்கள்கூட தங்கள் பதவியை இழந்து தவிப்பர். எல்லா மக்களுக்கும் சம உரிமையளிக்கும் ஆட்சி முறையைக் கட்சி சர்வாதிகாரம் என்று கூறினல், இச்சர்வாதிகாரம் மக்களால் வரவேற்கப்பட வேண்டிய தொன்றுதான்!

## V

## பிரிவினைப் பிரச்னை

நம் நாட்டில் இப்போது பிரிவினைக் கிளர்ச்சியின் பலம் "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக"

வளர்ச்சியடைந்து வருகிறது! சோஷலிஸத்தில் பிரிவினைக்கு இடம் உண்டா?

சோஷலிஸம் தேசியத்தைக் காட்டிலும் உலகத் தொழிலாளர்களின் இயக்கத்துக்குத்தான் அதிக முக்கியத்துவமளிக்கிறது. ஏனெனில் மார்க்ஸின் தத்துவப்படி உலக நாடுகள் எல்லாவற்றிலும் தொழிலாளர் எழுச்சியும் அதன் பயனாய புரட்சியும் ஒரே காலத்தில் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இது சாத்தியமற்றுப் போய்விடவே, மார்க்ஸீயத் தத்துவத்திற்கு மாற்றுத் தத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிரிவினை, விடுதலை வேட்கை கொண்ட மக்களின் அவாவைப் பூர்த்தி செய்யுமானால்—பிரிந்து போகும் மக்கள் சோஷலிஸத்தை நிறுவ அடிகோலுமானால்—அது சோஷலிஸத்தால் வரவேற்கப்படவேண்டிய தொன்றாகிவிடும். "பிரித்து ஆட்சி செய்" என்ற தந்திரம் மாற்றமடைந்து "பிரிந்து விடுதலை பெறு" என்ற பெருந்தகைமையாக மாறி மேம்பாடு அடையுமானால் அதை வரவேற்பதில் சோஷலிஸத்துக்கு எவ்விதத் தடையுமிராது.

தென்னாட்டுப் பிரிவினை இயக்கத்தை எதிர்க்கும் இடதுசாரிகளெல்லோரும் "தென்னாட்டைச் சுரண்டும் அதே முதலாளிகள்தான் வடநாட்டையும் சுரண்டுகிறார்கள். ஆகையால் பிரிவினை பிரச்னையைத் தீர்க்கும் வழியல்ல" என்று வாதம் செய்கின்றனர். இது உண்மைதான். ஆனால், தென்னாட்டினரிடையேயும் வடநாட்டவரிடையேயும் காணப்படும் முதலாளித்துவ எதிர்ப்பு உணர்ச்சி ஒரே தன்மையானதாக இருக்கிறதா? சென்னை, ஆந்திரதேசம், திருவாங்கூர் - கொச்சி, ஹைதராபாத் போன்ற இராஜ்ஜியங்களில் மக்களுள் பெரும்பாலோர் இடதுசாரிகளை ஆதரிக்கின்றனர் என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

ஆனால் வடநாட்டில் முதலாளித்துவத்தை ஆதரிக்கும் சக்திகள்தான் மேலோங்கி நிற்கின்றன. மேற்குறிப்பிடப்பட்ட இராஜ்ஜியங்களில் இடதுசாரிகள் அதிகாரத்தைக் கைப்பற்றினாலும்கூட மத்திய அரசாங்க அதிகாரத்தை அவர்களால் அடையமுடியாது. இந்நிலையில் மத்திய அரசாங்கத்தின் பிற்போக்குத்தனமான தலையீடு, முட்டுக்கட்டை இவற்றின் காரணமாகத் தென்னாட்டிலுள்ள இடதுசாரிகளின் அரசாங்கங்களால் மக்களுக்குத் தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமற் போய்விடும். இதனால் வடநாட்டு மக்கள் மனந்திருந்தும் வரை தென்னாட்டினர் காத்துக்கிடக்க வேண்டுமா? காத்துக்கிடப்பரா? இந்த நிலையில் பிரிவினையை எதிர்த்து இடதுசாரிகள் என்ன காரணத்தைக் காட்டமுடியும்?

தற்சமயம் பிரிவினை அவசியம் என்பதல்ல எமது வாதம். ஆனால் மேற்கூறிய நிலை ஏற்பட்டுவிட்டால் தோழர்கள் ஜயப்பிரகாஷ் நாராயணனும், ஏ. கே. கோபாலனும் பிரிவினையைப் பற்றியதொரு முடிவுக்கு வரும்வரை மக்கள் காத்திருக்கமாட்டார்கள் என்பதை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

G
XM2
31J3

## SOME SOURCES.

1. Das Capital — *Marx and Engels.*
2. A Creative Capitalism — *Bergeron and Goodbar.*
3. The Decline and Fall of British Capitalism — *Keith Hutchison.*
4. Path to Prosperity — *G. D. Birla.*
5. Marxism and the National Question — *Stalin.*
6. Stalin on Lenin.
7. The Management of Russian Agriculture and Industry — *Jacob Marshack.*
8. Cottage Industries and Agriculture in Japan — *Chaman Lal.*
9. Politics of Planned Economy — *Asoka Mehta.*
10. Democratic Socialism — *Asoka Mehta.*